# The Ethnographic Life of the Mathangar Community in Veerayuga Naayagan Velpaari

**Dr. K. Santhanalakshmi**
*Associate Professor & Head, Department of Tamil*
*Government Arts and Science College, Sattur*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346620

**Abstract**

*The lifestyle changes of tribal communities are the footprints of history. In Veerayuga Naayagan Velpaari, Venkatesan portrays the cultural identity of the indigenous tribes. This novel presents the moral and ethical way of life followed by tribal groups. The ancient tribes, who once lived independently, were destroyed by the dominance of great empires; their distinct ways of life were suppressed, and they were turned into slaves, losing their identity. However, the remnants of those tribes could never be completely erased by time — this is vividly reflected in the life of the Mathangar community The Mathangars, who originated from the Vedars, lived as Panars — musicians and performers. The novel Velpaari describes how the Cholas enslaved these people and forced them into seafaring labor. This paper aims to examine the lifestyle transformation of the Mathangar community through an ethnographic lens. The study, through the Velpaari novel, emphasizes that nature-based living and the spirit of unity among tribal groups can protect them from forces of domination.*

***Keywords:*** *Thadari, Mathangar, Yaal Deivathai, Panar, Kollikkattu Vidhai, Tribal Groups, Viraliyar*

**References**

1. Ki. Paa. Ko. Anitha Kumari. – Ajnabi Novel from an Ethnographic Perspective, Pranav Tamil Electronic Research Journal, Vol. 1, Issue 3, June 2022.
2. P. Indirani. – Ethnographic Study of the Desert (Paalai) Landscape in Sangam Songs, Ph.D. Thesis, February 2022, Manonmaniam Sundaranar University, Tirunelveli.
3. R. Srinivasan. – History of Tamil Literature, Tamil Literary Academy, Chennai, Eighth Edition, 1999.
4. Venkatesan. – Veerayuga Naayagan Velpaari.
5. Ki. Malarvizhi. – Humanistic Perspective on the Life of the Porunar Community, Mutharasi Journal of Art, Literature, and Tamil Cultural Studies, Vol. 1, March 2025.

# வீரயுக நாயகன் வேள்பாரியில் மதங்கர் இன வாழ்வியல்

*முனைவர் கா. சந்தானலெட்சுமி*
இணைப் பேராசிரியர் & துறைத்தலைவர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*இனக்குழுக்களின் வாழ்வியல் மாற்றங்கள் வரலாற்றின் சுவடுகள் ஆகின்றன. ஆதிக் குடிகள் மக்கள் பண்பாட்டின் அடையாளமாவதை வீரயுக நாயகன் வேள்பாரியில். வேங்கடேசன் விவரித்துக் கூறுகிறார் அறம் சார்ந்த இன குழு வாழ்வியலை இந் நாவல் முன் வைக்கின்றது. தொல்குடிகள் பேரரசுகளின் ஆதிக்க பலத்தால் அழிக்கப்படுகின்றனர் சுயத்தின் வாழ்வியலை உடைய தொல்குடிகள் அடிமைகளாக்கப்பட்டு அடையாளம் இழக்கப் படுகின்றனர் இருந்த போதிலும் அக்குடிகளின் எச்சங்கள் என்றும காலத்தால் அழிக்கப்பட முடியாது என்பதையே மதங்கர் இன வாழ்வியல் காட்டுகிறது வேடர்குலத்திலிருந்து பாணர்களாக இசையோடும் கூத்தோடும் வாழ்ந்தவர்கள் மதங்க இனத்தினர் ஆவார்கள் சோழர்களால் கடலோடி அடிமையாக்கப்பட்டதை வேள்பாரி நாவல் விவரிக் கிறது. மதங்க இனத்தவரின் வாழ்வியல் மாற்றத்தினை இன வரைவியல் ஆய்வு அணுகுமுறையில் இக்கட்டுரைகாண விழைகின்றது இயற்கை சார் வாழ்வியலும் இனக் குழுக்களின் ஒற்றுமை உணர்வும் அவர்களை ஆதிக்க பலத்திலிருந்து காக்க வல்லன என்பதை வேள்பாரி நாவல்வாயிலாக இந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *தடாரி மதங்கர், யாழ் தேவதை, பாணர், கொல்லிக்காட்டு விதை,இனக்குழு, விறலியர்*

## முன்னுரை

ஆதிக்குடிகளின் வாழ்க்கை வரலாற்றுக் காவியமாக வீரயுக நாயகன் வேள்பாரி நாவல் படைக்கப்பட்டுள்ளது. வரலாறு மனித வாழ்க்கைப் பயணத்தின் வெளிப்பாடாகிறது. இனக்குழுக்களின் வாழ்வியல் தக்கவைப்பே வரலாற்றின் சுவடுகளாகின்றன. காலங்கடந்த கதையாக இருந்தாலும் காலத்தைக் காட்டும் இலக்கியம் காலந்தோறும் படைக்கப்படுவதைக் காண முடிகின்றது. வீரயுக நாயகன் வேள்பாரியில் இனவரைவியல் ஆய்வு அணுகுமுறையில் மதங்கர் இன வாழ்வியலை காண விழைவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இலக்கியத்தில் இனவரைவியல்

“எல்லே இலக்கம்” என்கிறது தொல்காப்பியம் இலக்கினை உடையது இலக்கியம். இயம்பப்படும் கருத்துக்களில் பல்வேறு இலக்குகளை உள்ளடக்கியதாக இலக்கியம் காலவெளியில் மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது. இனவரைவியலும் இலக்கியம் போன்றே மக்கள் பண்பாட்டை உணர்த்தும் ஆய்வியலாக உள்ளது.

“இனக்குழு என்னும் பொருளை உடைய Ethnography என்னும் ஆங்கிலச்சொல் Ethnos, Graphein ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களாகப் பெற்றது.”[1] இனவரைவியல் என்பதற்கு ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றிய எழுத்து என்றும் பொருள் கொள்ள முடிகின்றது. மக்கள் வாழ்வியல் தொன்றுதொட்டு வரும் பழக்கங்களின்அடிப்படையில்அமைந்தது.” இனவரைவியல் என்பது மக்களின் பண்பாட்டை எழுதுவதாகும் பண்பாடு என்பது பல கூறுகளின் தொகுப்பு ஆகும்.”[2]

அன்றுதொன்று இன்றுவரை பண்பாடு அகம் மற்றும் புறம் சார்ந்தே அமைகின்றது.

"அகத்திணைப் புறத்திணைப் பாடல்களுக்கு மலை, காடு, பாலை, வயல், கடல் காலம் முதலியன பின்னணியாக அமைகின்றன."[3] இத்தகைய வாழ்வியல் பின்புலங்கள் இனவரைவியலுக்கு அடிப்படையாகின்றன.

மக்கள் வாழ்கின்ற இடம், காலம், பயன்படுத்தும் பொருள்கள் மக்களின் திறன் ஆகிய அடிப்படைகளிலே அவர்களின் இனப்பாகுபாடும் அமைகின்றது. வேடர்குலத்திலிருந்து பாணர்களாக அறியப்படுபவர்கள் மதங்கர்கள் ஆவார்கள்.

**மதங்கர்களின் வாழ்வியல்**

தனது நாட்டை விரிவாக்கம் செய்தல் என்ற முறையில் எண்ணற்ற குறுநாடுகள் காலந்தோறும் அழிக்கப்படுதல் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றது. தாங்கள் கைபற்றும் நாட்டினையும் மக்களையும் தங்களின் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளுதல் அவர்களின் சுயம் அழிக்கப்பட்டதையே பேரரசுகளின் வெற்றி காட்டுகிறது என்பதையே வேள்பாரி நாவல் உணர்த்துகிறது.

பேரரசை உருவாக்கும் கனவுக்கு எண்ணற்ற இனக்குழுக்கள் இரையாக்கப்பட்டுவிட்டன. மதங்கர் இனமே முற்றிலும் அழிந்து போய்விட்டது என நினைத்துக் கொண்டிருந்த பாரிக்கு தப்பிப் பிழைத்த அந்தப் பாணர் குழுவைப் பார்த்ததில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.[4]

சித்தாற்றங்கரையில் இருந்த நெட்டூர் மலையை சோழன் கைபற்றி விட்டான். அந்த மண்ணின் மகா கலைஞர்களான மதங்கர்கள் இப்போது அவனது கடல் பணிகளுக்கு ஏவல் செய்து கொண்டிருக்கின்றனர். யாழிசையின் பெருந்தேவிகளான அந்த குலப்பெண்கள் சோழ அரண்மனையில் விறலிகளாக மாறிக்கிடக்கின்றனர்.[5]

இனக்குழுக்கள் வாழ்வியல் மாற்றம் பெற்ற கால நிகழ்வுகளை இதன்மூலம் அறியமுடிகின்றது. மதங்க இனம் தனது வேட்டையாடும் குணத்தை தனது இசையோடும் கூத்தோடும் இணைத்து பார்த்து வாழ்ந்த சமூகம் ஆகும். அதனால் தான் தங்களின் முக்கிய இசைக் கருவியான தடாரியை தங்களின் முன்னோர்கள் வேட்டையாடிய யானையின் காலடி அளவு கொண்டே தடாரியை வடிவமைப்பர்.[6] தடாரியே மதங்கரின் அடையாளம் என்பதால் அதனை கையில் ஏந்தியவாறே எங்கும் செல்வர். தடாரி மண்ணில் வைக்கப்பட்டால் அங்கு கூத்து நிகழ்த்தப்பட வேண்டும் எனக் கருதினர். யாழ் தேவதை உருகி அழைக்கும்போது மதங்கர் தடாரியோடு இசைக் கூட்டத்தினுள் குதிக்கின்றான்.[7] அவன் குதிக்கின்ற இடமே பெரும் பள்ளத்தை ஏற்படுத்துகின்றது. மதங்கனின் தடாரியோடு பிற தடாரிகளும் ஒலிக்க கூத்து களை கட்டுகிறது. மூதாதையர்களின் ஆதிக்கூத்து மதங்கர் மயங்கிச் சரிந்ததோடு முடிந்தது. "கலையின் அடிப்படை பொருள் மனதின் அழியாத உண்மையின் தத்து வத்தையும் வெளிப்படுத்த வேண்டும்."[8]

இந்த வகையிலே மதங்கரின் கூத்தும் இனக்குழுவின் துயராக உள்ளது. அதனால் தான் தொல்குடியினர் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது மதங்க கூத்தினை காண விருப்பம் கொள்கின்றனர்.

**இசைக்கருவிகளின் பயன்பாட்டு மாற்றம்**

மதங்க இனக்குழுவில் பெண்களே யாழை மீட்டுகின்றனர். ஆனால் சங்க இலக்கியங்களில் கூத்தில் பொருநர் பாணர் யாழ் மீட்டுவதாக உள்ளது. மதங்கரே தடாரியை வாசிக்கின்றான். ஆனால் ஆண்களும் பெண்களும் தடாரியை வாசித்துள்ளமையை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

***அரிகுரல் தடாரி இரியஒற்றிப்***

***(புறம் 390)***

என்பதில் ஔவையார் தடாரி வாசித் தமையை உணர முடிகின்றது. காலமாற்றத் திற்கு ஏற்ப இனக்குழுவினரின் வாழ்வியல்

முறைகள் மாற்றம் அடைவதையே காலந்தோறும் செய்யப்படும் இனவரைவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

## கொல்லிக்காட்டு விதையும் குலத்தின் காப்பும்

தங்களது குலத்தின் அடையாளமாக கொல்லிக்காட்டு விதைகளை பறம்புக் குடியினர் கொண்டுள்ளனர். அதனையே தங்களது குலம் காக்கவும் மதங்கர் வேண்டுவது அவரின் குடிப்பற்றினைக் காட்டுகிறது. மதங்கர் ஆதிவேடர் குலம் என்பதாலும் அவர்களின் மனவலி நீக்குவதற்காகவும் பாரி அவற்றை தர சம்மதிக்கிறான். எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள் என பாரி கொல்லிக்காட்டு விதைகளை மதங்க குலம் காக்கத் தருகிறான். தொல் இனக்குடிகள் தம்முள் துணையாகும். பாதுகாப்பினைத் தந்தே இயற்கையோடு இணைந்து வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

அழிந்து போன வரலாற்றை அறிய இனகுழுவாழ்வியல் மாற்றமே அடிப்படை ஆகின்றது. தமிழிலக்கியங்களில் எண்ணற்ற இனக்குழுக்களை அறிய முடிகின்றது. அவைகளின் வாழ்வியல் மாற்றங்களையே சமகால தமிழியல் ஆய்வுகள் நோக்குகின்றன. இசையோடும் இயற்கையோடு இணைந்த மதங்க இனத்தின் வாழ்வியல் மாற்றத்தை வீரயுக நாயகன் வேள்பாரி வாயிலாக இவ்வாய்வு உணர்த்துகின்றது.

## குறிப்புகள்

1. கி. ஷிபா கோ அனிதாகுமாரி இனவரைவியல் நோக்கில் அஜ்னபி நாவல் பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் ப 4. v-1 issue – 3 –oct 22
2. பி. இந்திராணி - சங்கப்பாடல்களில் பாலை நில இனவரைவியல் ப.33
3. ரா. சீனிவாசன், தமிழ் இலக்கிய வரலாறு ப.15
4. Word Press. com வீரயுக நாயகன் வேள்பாரி book.pdf
5. மேலது ப.71
6. மேலது ப.71
7. மேலது ப.78
8. கி. மலர்விழி, மானுட நோக்கில் பொருநர் வாழ்வியல் முத்தரசி கலை இலக்கிய பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

## துணைநூற்பட்டியல்


1. கி. பா கோ அனிதாகுமாரி இனவரைவியல் நோக்கில் அஜ்னபி நாவல் பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் ப v-1 issue – 3 –oct 22
2. பி. இந்திராணி - சங்கப்பாடல்களில் பாலை நில இனவரைவியல் முனைவர் பட்ட ஆய்வேடு - பிப்ரவரி 2022 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
3. ரா. சீனிவாசன் தமிழ் இலக்கிய வரலாறு அணியகம் சென்னை எட்டாம் பதிப்பு 1999
4. Word Press. com வீரயுக நாயகன் வேள்பாரி book.pdf
5. கி. மலர்விழி, மானுட நோக்கில் பொருநர் வாழ்வியல் முத்தரசி கலை இலக்கிய பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ் spl Editon iv vol -1 மார்ச் 25